SRI N. R. THIAGARAJAN : இவ்வளவு வருமானம் கொடுக்கக் கூடிய ஊரில் ஒரு ஆஸ்பத்திரி கூட இல்லையென்று பொதுஜனங்கள் கருதுகிறார்களே, அங்குள்ள மக்களின் சுகாதார வசதியை உத்தேசித்து உடனடியாக ஒரு ஆஸ்பத்திரியை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

MR. SPEAKER : அதற்குத் தனியாக கேள்வி போடுங்கள்.

Village Officers

* 10 *Q*.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether the salaries of village officers in zamin, inam and mitta areas are the same as those in ryotwari areas?

THE HON. SRI M. A. MANICKAVELU : The answer is in the affirmative.

SRI N. K. PALANISAMI : 1951-ம் வருஷம் ஜமீன் மிட்டா இவற்றை ரயத்வாரியாக மாற்றியபோது அங்குள்ள சிப்பந்திகளுக்கும் ரயத்துவாரி ஏரியாவில் உள்ளவர்களுக்கும் கொடுக்கப்படும் சம்பளத்தைக் கொடுக்க வேண்டும். ஐந்து வருஷம் கழித்து அவர்கள் சம்பளம் ஒன்றாக்கப்பட்டதால் அந்த ஐந்து வருஷத்திற்கும் அவர்களுக்குச் சேரவேண்டிய பாக்கியைக் கொடுக்க சர்க்காரிடத்தில் திட்டம் ஏதாவது இருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஜமீன் இனாம் எடுத்துக் கொள்வதில் சில தகராறு எழுந்து கோர்ட்டுக்குப் போகும்படியாக இருந்தது. கடைசியாக இவையெல்லாம் தீர்ந்த பிற்பாடு அவை சர்க்காரால் எடுத்துக்கொண்ட பிற்பாடு புது சம்பள விகிதாசாரம் எல்லோருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

Industrial co-operatives

* 11 *Q*.—SRI K. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of industrial co-operatives for weavers, so far started;

(*b*) whether there is any proposal to start more co-operatives in 1958–59; and

(*c*) if so, how many and at what places?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Seven industrial co-operatives for handloom weavers have been started so far

(*b*) & (*c*) Yes, Sir, it is proposed to set up four more industrial co-operative societies during 1958–59, one each at Rajapalayam and Paramakudi in the Ramanathapuram district, one at Vijayamangalam in the Coimbatore district and one at Thirumizhisai in the Chingleput district.

SRI K. RAMACHANDRAN : இந்த இண்டஸ்டிரியல் கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு சர்க்கார் எவ்வளவு மூலதனம் கொடுத்திருக்கிறது ? மெம்பர்களிடமிருந்து எவ்வளவு எதிர்பார்க்கப்படுகிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த ஸ்தாபனங்களில் எவ்வளவு அங்கத்தினர்கள் சேருகிறார்களோ அந்த எண்ணிக்கையைப் பொறுத்தது அவ்விஷயம். ராஜபாளையம் தொழில் கூட்டுறவு ஸ்தாபனத்தைப் பொறுத்த வரையில் மானியம் 3,600 ரூபாய் கொடுக்கப்படுகிறது. கடனாக ரூ. 33,080 கொடுக்கப்பட்டிருக்கிறது.

3rd September 1958]

SRI T. T. DANIEL : May I know from the Hon. Minister on what basis the Government propose to start these new industrial co-operative societies?

THE HON. SRI R. VENKATARAMAN : Whenever we find unemployed weavers in an area, we try to start these co-operatives there.

SRI K. VINAYAKAM : Is there any request from the Saidapet Weavers' Co-operative Society to start an industrial co-operative society there and if so, at what stage does the matter stand ?

THE HON. SRI R. VENKATARAMAN : I cannot say whether the Saidapet Society has asked for a special industrial co-operative. But I must say that throughout the State, there is very great demand for these industrial co-operatives.

SRI R. KRISHNASAMI NAIDU : இந்த தொழில் கூட்டுறவு ஸ்தாபனங்களின் மூலமாக எவ்விதமான தொழில் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்தக் கேள்வி நெசவுத் தொழிற்சாலையைப் பற்றியது.

SRI K. RAMACHANDRAN : இந்த கூட்டுறவு நெசவுத் தொழிற்சாலையில் வேலை செய்கிறவர்களுக்கு வெளியில் வேலை செய்கிறவர்களைவிட சம்பள விகிதம் கூடுதலாக இருக்கிறதா ? குறைவாக இருக்கிறதா ? எப்படி இருக்கிறது ? சாதகம் ஏதாவது உண்டா என்று கேட்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த நெசவு கூட்டுறவு ஸ்தாபனங்களை அதிகமாக ஏற்படுத்தவேண்டுமென்ற கோரிக்கை அதிகமாவதிலிருந்து கூலிவிகிதம் நன்ருக இருக்கிறதென்று நினைக்கிறேன்.

SRI A. VEDARATNAM : கதர் நெசவு செய்கிறவர்களுக்கும் இம்மாதிரியான தொழில் கூட்டுறவு ஸ்தாபனங்களை ஏற்படுத்திக் கொடுத்து அவர்களுக்கும் இவ்விதமான சலுகை கிடைக்கும்படியாகச் சர்க்கார் செய்வார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : நம் திட்டப்படி நெசவுத் தொழிலாளர்கள் 50 பர்சன்ட் இந்த ஸ்தாபனத்தின் கீழ் வரவேண்டும். அதற்கான முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

SRI G. GOMATHISANKARA DIKSHITAR : இந்த ஸ்தாபனத்தில் சாயம் விடக்கூடிய தொழிலும், அச்சிடக்கூடிய தொழிலும் முக்கியமாகச் சேர்க்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அது இப்பொழுதே சேர்க்கப்பட்டிருக்கிறது.

Kulasekharapattinam Port

* 12 *Q.*—SRI S. B. ADITYAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government have passed any orders for collecting landing charges as from 1st June 1958 at Kulasekharapattinam Port, Tirunelveli district?

THE HON. SRI P. KAKKAN : Yes, Sir.